# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 21.01.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று பத்திரிகை, இன்டர்நெட் உட்பட எல்லா எல்க்டரானிக் மீடியாக்களிலும் முஸ்லிம்களாலும் முஸ்லிம் அல்லாத பிற மக்களாலும் பேசப்படுகின்ற விஷயம் பாகிஸ்தானின் அவமதிப்புச் சட்டம் பற்றியதாகும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்தை அவமதிப்பதை தடுக்கின்ற சட்டம் பற்றியதாகும்.

எந்தவொரு நபியையோ, இறைவனால் அனுப்பப்பட்ட தூதரையோ அவமரியாதை செய்வது, ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் முதல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வரையிலான நபிமார்கள் மீது ஈமான் கொண்ட ஓர் உண்மையான முஸ்லிமுக்கு மிகவும் துயரத்தை தரக்கூடிய செயலாகும். அதேபோன்று அவர்களின் (தூய) வாழ்க்கையின் மீது எதிர்ப்பினை தெரிவிப்பதும் ஓர் உண்மையான முஸ்லிமுக்கு மிகவும் வேதனையை தரக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறிருக்க இறைவனால் அனுப்பப்பட்ட அனைத்து நபிமார்களையும் விட மேலான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வை அவமதிப்பதால் ஓர் உண்மையான முஸ்லிம் துயரம் அடைந்து விடுகின்றான். அந்த முஸ்லிம் தனது தலை துண்டிக்கப்படுவதையோ, தனது குழந்தைகள் தமது முன்பாக கொலை செய்யப்படுவதையோ, தனது பொருள்கள் சூறையாடப்படுவதையோ சகித்துக் கொள்ளலாம். ஆனால், தமது எஜமானராகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்துவது ஒரு பக்கம் இருக்கட்டும்; ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சம்பந்தமாக விரும்பத்தகாக ஏதாவது ஓரிரு வார்த்தைகளை (தனது காதில்) கேட்டால் கூட அவர்கள் மிகவும் வேதனை அடைகின்றார்கள். எவ்வாறிருந்தபோதிலும் நான் கூறியது போன்று, முஸ்லிம் உலகத்தில், குறிப்பாக பாகிஸ்தானில் ஒரு சில சூழ்நிலையின் காரணமாக இந்த விஷயம் பாகிஸ்தானில் முக்கியமான திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாகவே உலகத்தின் பார்வை இன்றைய காலகட்டத்தில் பாகிஸ்தானின் பக்கம் திரும்பியுள்ளது. இதற்கு மற்ற காரணங்கள் இருந்தாலும் இந்த காரணம்தான் மிகப்பெரிய காரணமாக இருக்கின்றது. மேலும் மேற்கத்திய நாடுகளின் ஒரு சில தலைவர்கள் மற்றும் போப் உட்பட இது சம்பந்தமாக பாகிஸ்தானிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றார்கள். இன்றைய காலகட்டத்தில் பத்திரிகை வாயிலாக மேற்கத்திய நாடுகள் அல்லது வளர்ந்த நாடுகளாகத் தம்மைக் கருதுபவர்கள் முஸ்லிம்களையும், இஸ்லாத்தையும் தீவிரவாத, இழிவடைந்த ஒரு மதமாக, சமுதாயமாக கருதுகின்றனர். இதற்கு பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் இதர முஸ்லிம் நாடுகளை உதாரணம் காட்டுகின்றனர். எவ்வாறிருந்தபோதிலும், நான் இப்போது நா மூஸே ரிஸாலத் – அமதிப்புச் சட்டத்தின் முக்கியத்துவம் முஸ்லிம்களின் பார்வையில் எவ்வாறு இருக்கின்றது. மேலும் இதற்கு ஓர் ஆட்சியின் செயல்முறை எவ்வாறிருக்க வேண்டும்? அல்லது இதன் மூலம் முஸ்லிமல்லாத உலகம் எந்த அளவுக்கு இலாபத்தைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றது. மேலும் அந்த ஆட்சி ஒரு சில சூழ்நிலையில் முஸ்லிம்களின் உணர்ச்சிகளுடன் விளையாடுகின்றனர் என்பதைப் பற்றி நான் கூற முன்வரவில்லை.

மாறாக, நான் இன்று எனது எஜமானராகிய ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் கண்ணியத்தினை எவராவது ஒருவர் இமியளவிலாவது இழிவுபடுத்த முன்வந்தால் அவர் இறைவனின், **நாம் நிச்சயமாக உம்மை இழிவுபடுத்துபவருக்கு எதிராக உமக்கு போதுமானவராக இருக்கின்றோம் (15:96)** என்ற வசனத்திற்கேற்ப பிடிக்கப்படுவார். மேலும் அவரது இவ்வுலகம் மற்றும் மறுமையின் வாழ்வு சீரழிந்து விடும். ஈருலகிற்கும் எஜமானராகிய ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் அந்தஸ்து எவ்வாறானதென்றால் அன்னாரின் மதிப்பு மற்றும் கண்ணியத்தை அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் எந்த அளவுக்கு பாதுகாத்து வருகின்றான் என்றால், அந்த அளவு வரை இவ்வுலகத்தை விரும்புபவர்களின் பார்வை சென்றடைய முடியாது. ஹஸ்ரத்

ரஸூல் (ஸல்) அவர்களின் மதிப்பு, அந்தஸ்து மற்றும் கண்ணியத்தை ஒவ்வொரு நொடியும் மேலே உயர்த்திக் கொண்டே செல்கின்றான். அவர்களின் கண்ணியம் பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

**அல்லாஹ் மற்றும் அவனது அனைத்து மலக்குகளும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுகின்றார்கள். (33:57)**

ஆக, இந்தவொரு அந்தஸ்து ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு மட்டும் தான் கிடைத்திருக்கின்றது. இந்தக் கூற்று எப்படிப்பட்ட கூற்று என்றால், வேறு எந்த நபியின் கண்ணியத்திற்காகவும் இது பயன்படுத்தப்படவில்லை. மேலும் இந்த அந்தஸ்த்தை இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை நேசரான ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மட்டும்தான் புரிந்திருக்கின்றார்கள். மேலும் நமக்கு கூறவும் செய்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

நமது எஜமானராகிய ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நேர்மை மற்றும் விசுவாசம் எவ்வாறிருந்ததென்றால், அன்னார் அனைத்து தீய திட்டங்களையும் எதிர்த்து வந்தார்கள். பலதரப்பட்ட துன்பங்கள் மற்றும் கஷ்டங்களை அனுபவித்து வந்தார்கள். ஆனால் அதற்காக அவர்கள் எந்த கவலையும் கொள்ளவில்லை. இந்த நேர்மை மற்றும் விசுவாசம் தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது அல்லாஹ் அருள்களை வழங்குவதற்கு காரணமாக அமைந்தது. இதன் காரணமாகவே இறைவன், **நிச்சயமாக அல்லாஹ் இந்த நபியின் மீது தன் அருளைப் பொழிந்து கொண்டே இருக்கின்றான். மலக்குகளும் (இவர்களுக்காக பிரார்த்தனைகள் செய்து கொண்டே இருக்கின்றனர்.) எனவே நம்பிக்கை கொண்டவர்களே! இந்த நபி(கள் நாயகம் அவர்களு)க்கு எப்போதும் அருள் பொழியுமாறும் சாந்தியும் சமாதானமும் கிடைக்குமாறும் நீங்களும் பிரார்த்தனை செய்யுங்கள். (33:57)** என்று கூறியுள்ளான்.

இந்த வசனத்தின் மூலம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் செயல்கள் எவ்வாறிருந்ததென்றால் அல்லாஹ் அதனை புகழ்ந்தோ, மேம்படுத்திக் கூறுவதற்கோ எந்தவொரு வார்த்தையையும் குறிப்பிட்டுக் கூறவில்லை. வார்த்தைகள் கிடைக்கலாம்; ஆனால் அவன் தானே அதனை உபயோகப்படுத்தவில்லை. அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் புகழ் எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. இந்த வசனத்தைப் போன்றதொரு வசனத்தை வேறு எந்த நபிக்காகவும் கூறவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஆன்மாவில் எந்த அளவுக்கு நேர்மை, விசுவாசம் இருந்ததென்றால், அன்னாரின் செயல்கள் இறைவனது பார்வையில் எந்த அளவுக்கு விருப்பமானதாக இருந்ததென்றால் அல்லாஹ் இனி வரக்கூடிய ஒவ்வொரு மக்களும் நன்றி தெரிவிக்கும் வகையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுங்கள் என்று கட்டளையிட்டு விட்டான்.

ஆக, இந்த நேர்மை மற்றும் விசுவாசத்தின் முன்மாதிரியைத்தான் நம்முன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நிலைநாட்டிக் காட்டினார்கள். இந்த நேர்மை மற்றும் விசுவாசத்தின் தொடர்பை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் யாருக்கு காட்டினார்கள்? இந்த தொடர்பினை தன்னைப் படைத்த இறைவனிடம் காட்டினார்கள்.

ஆகவே, நாம் நமது நபி (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்றால், ஓர் உண்மையான மூஃமினாகத் திகழ்ந்த அந்த உம்மத்துடன் நாம் சேர வேண்டுமென்றால், நாம் நேர்மை மற்றும் விசுவாசத்துடன் இறைவன் நமக்கு வழங்கிய கட்டளையின்படி நடப்பதும் அவசியமாகும். நமது நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவதில் நமது நாவினை எப்போதும் புத்துணர்ச்சியாக வைத்திருக்க வேண்டும். ஏனென்றால் நாமும் இறை நெருக்கத்தை இதன் மூலமே அடைய வேண்டும். மேலும் அன்பிற்குரிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் சார்ந்திருக்கும் இறைவனின் அருள்களுக்கு நாம் வாரிசாக வேண்டும்.

உதாரணமாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சம்பந்தமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் செயல்களை புகழ்தல் என்பது அனைத்து எல்லைக்கும் அப்பாற்பட்டதாக இருந்தது. இதன் காரணமாக அல்லாஹ் மற்றும் அவனது மலக்குகள் அன்னாரின் மீது ஸலவாத் ஓதக்கூடிய அளவிலான அந்தஸ்து கிடைக்கின்றது. மேலும் நம்பிக்கையாளர்களுக்கும் ஸலவாத்

ஓதுங்கள் என்ற கட்டளை தரப்பட்டுள்ளது. ஸலவாத் ஓதும்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நம்மீது காட்டிய அந்த விசுவாசத்தையும் முன் வைத்து ஓதுங்கள். நமக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறைவனை அடையும் வழியினைக் காட்டித் தந்தார்கள். இறைவனுக்குப் பிரியமான நடைமுறையினை நம்முன் நாம் வெளிப்படுத்த வேண்டும். எங்கு இறைவன் சம்பந்தப்பட்ட தன்மானம் மற்றும் ஏகத்துவத்தின் முன்மாதிரியைக் காட்டித் தந்தார்களோ அதே வேளையில் அப்த் (அல்லாஹ்வின் அடிமை) என்ற பண்பினை முழுமையாக வெளிப்படுத்தியவாறு இபாதத்தினையும் செய்து வந்தார்கள். இறையச்சத்தின் உன்னதமான எடுத்துக்காட்டுகளையும் நம்முன் வழங்கியுள்ளார்கள். அதுமட்டுமல்லாமல் இறைவனைப் புகழ்தலின் மிக உயர்ந்த நடைமுறையின் உன்னதமான எடுத்துக்காட்டினையும் வழங்கியிருக்கின்றார்கள். திருக்குர்ஆனில் இறைவன் மூஃமின்களுக்கு அனைத்து சூழ்நிலைகளிலும் உண்மையின் வழியில் நடந்து, நேர்மையினை நிலைநாட்டவும், தமது வாக்கினை முழுமைப்படுத்தவும், இரத்த உறவுகளை பேணவும், மக்களுடன் அனுதாபம், கருணை மற்றும் அன்பின் செயலினை வெளிப்படுத்தவும், பொறுமை மற்றும் தைரியத்தை வெளிப்படுத்தவும், மன்னித்தலைப் பேணவும், பணிவினை மேற்கொள்ளவும், எல்லா நிலையிலும் இறைவன் மீது தவக்குல் வைப்பது பற்றியும் கட்டளை வழங்கியுள்ளான். இது தவிர இன்னும் பல கட்டளைகள் இருக்கின்றன. இதற்கு மிக உன்னதமான எடுத்துக்காட்டினை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நம்முன் எடுத்துக் காட்டினார்கள். ஆகவே, நம்பிக்கையாளர்கள் மீதான கடமை என்னவென்றால் அவர்கள் எப்போதும் நமது எஜமானர் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓத வேண்டும். மேலும் இந்த முன்மாதிரியையும் வெளிப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் ஓர் உண்மையான மூஃமின் தமது எஜமானர் (ஸல்) அவர்களுடன் வைத்திருக்கும் நேர்மை மற்றும் விசுவாசம் வெளிப்படும். பின்பு ரஸூல் (ஸல்) அவர்களின் மூலம் இறைவன் மீதான நேர்மை மற்றும் விசுவாசதை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். இது வெளிப்படும் போதுதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கூறப்படும் ஸலவாத்தானது நன்றி செலுத்தியவறு கூறும் ஸலவாத் என்று கூறத் தகுந்ததாக இருக்க முடியும்.

இதுதான் ஒரு மூஃமினுக்கும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குமிடையில் இருக்கும் அன்பு மற்றும் விசுவாசத்தின் உறவாகும். இதுதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உன்னதமான முன்னுதாரணமாகும். பிறரின் வாயினை மூடுவதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியினைப் பேணுவதற்கு முயற்சி செய்யுங்கள். அவ்வாறில்லாமல் தமது சுயநலனுக்காக நீதியினை தூள்தூளாக்கி விடாதீர்கள். மேலும் பிறர் நம்மீது விரலை உயர்த்தும் அளவிற்கும் நடந்து கொள்ளக் கூடாது. உங்கள் மீது மட்டுமல்லாமல் தமது செயலின் காரணமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இழிவு மற்றும் கண்ணியம் குறைந்த, அவமதிப்பான வார்த்தைகளை உபயோகிக்கும் வாய்ப்பினையும் கொடுத்து விடக் கூடாது. இஸ்லாத்தின் எதிரிகளுக்கு நமது ஒரு சில பலவீனங்களின் காரணமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஏதேனும் வார்த்தையினைக் கூற வாய்ப்பு கிடைத்தால் நாமும் பாவியாக ஆகி விடுவோம். அதாவது உமது இந்த செயலானது இன்னாருக்கு இவ்வாறு கூறுவதற்கு வாய்ப்பாகி விட்டது என்று நம்மிடம் கேள்வி கணக்கு கேட்கப்படும். நீங்கள் இதனைத்தான் புரிந்து வைத்திருக்கின்றீர்களா? அதாவது உங்களின் ஒன்றுமில்லாத வெற்று முழக்கங்கள், தேவையற்ற முழக்கங்கள் மூலம் நீங்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது வைத்துள்ள நேசம் வெளிப்பட்டு விடுமா? அல்லது அந்த நேசத்தினை வெளிப்படுத்தக் கூடியவராக நீங்கள் ஆக முடியுமா? அல்லாஹ்விற்கு இது பிரியமானதல்ல. அல்லாஹ் செயலினை மட்டும் தான் விரும்புகின்றான். ஆக, முஸ்லிம்கள் அச்சப்படும் தருணமாக இருக்கின்றது. எதிரிகளின் வெறுப்பு, பொறாமை மற்றும் இதன் காரணமாக நமது எஜமானரார் (ஸல்) அவர்கள் மீது வைக்கப்படும் ஆட்சேபனைகள் மற்றும் கேலி கிண்டல்கள் வெளிப்படுத்தும் இவர்களுக்கு நானே போதுமான் என்று இறைவன் கூறியிருக்கின்றான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அந்தஸ்த்தைப் பற்றி நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் எந்தவோர் ஒளியினை வழங்கி இருக்கின்றார்களோ அதற்கு ஒவ்வொரு அஹ்மதியும் நன்றி கூறக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். இவ்வாறிருக்கவும் வேண்டும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நமக்கு சரியான வழியினை காட்டவில்லையென்றால் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுடனான நமது உறவும் வெறும் வெளிப்படையான முழக்கங்கள் மற்றும் ஊர்வலம் போன்றவையாகத்தான் இருக்கும். எனவே நாம் ஸலவாத்தில் ஆலி முஹம்மத் என்றும் கூறும்

போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அன்பான மஹ்தியையும் நினைவுகூற வேண்டும். அவர்கள்தான் இன்றைய காலகட்டத்தில் நமக்கு நேர்வழியினைக் காட்டித் தந்துள்ளார்கள்.

இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு சில மேற்கோள்களை முன் வைக்கின்றேன். அதன் மூலம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உன்னதமான அந்த அந்தஸ்த்தினை எவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் புரிந்திருந்தார்கள்; கண்டார்கள். மேலும் அது எவ்வாறானது? என்பது மட்டுமல்லாமல் அதனைக் கொண்டு நம்மை அறிய வைத்தார்களோ அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பங்கு தான் என்பது நமக்கு புரிய வரும்.

**ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

மனிதனுக்கு அருளப்பட்ட அதாவது முழுமையான மனிதனுக்கு அருளப்பட்ட உயர் தகுதியுடைய **அந்த ஒளி** வானவர்களிலோ, விண்மீன்களிலோ, சந்திரனிலோ, சூரியனிலோ இருந்ததில்லை. மேலும் பூமியிலுள்ள கடல், ஆறு இவைகளிலும் இல்லை. அது மாணிக்கம், மரகதம், நீலமணி, முத்து ஆகியவற்றினுள்ளும் இருந்ததில்லை. அதாவது பூமி, வானம் ஆகியவற்றிலும் எப்பொருளிலும் அது இருந்ததில்லை. அது மனிதனிடமே இருந்தது. அதாவது முழுமையான மனிதனிடம் இருந்தது. அதன் முழுமை, முடிவு, உயர்வு, மேன்மை எல்லாம் ஒருங்கே கொண்டவர் நம் தலைவரும், நம் அன்பிற்குரியவரும், தூதர்களின் தலைவரும், உயிரினங்களில் உயர்ந்தவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்கள்.

எனவே அந்த ஒளி அவருக்குக் கொடுக்கப்பட்டது. பின்னர் அவரின் குணயியல்புகளைச் சிறிதேனும் கொண்டவர்களுக்கும் அவர்களின் தகுதிக்கேற்ப கொடுக்கப்பட்டது. மேலும் இச்சிறப்பு முழுமையாகவும், நிறைவாகவும், உயர்வாகவும், நம் தலைவரும், நம் அன்பிற்குரியவரும், நம் வழிகாட்டியும், கல்வி கற்காத நபியும், உண்மையானவரும், உண்மையாளர் என உறுதி செய்யப்பட்டவருமான ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களிடமே இருந்தது.

பின்பு, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் அன்பில் தன்னை மாய்த்து விட்ட இந்த உண்மை நேசரின் உள்ளுணர்ச்சிகளின் வெளிப்பாட்டின் மற்றொரு முன்மாதிரியினைப் பாருங்கள்.

இந்த அரபு நாட்டைச் சார்ந்த முஹம்மது என்னும் பெயருடைய (ஆயிரமாயிரம் அருட்களும், சாந்தியும் அவருக்கு உண்டாவதாக) தீர்க்கதரிசி எவ்வளவு உயர்வான தகுதியினைக் கொண்ட தீர்க்கதரிசியாவார் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கிறேன். அவருடைய உயரிய நிலையின் எல்லையைக் கண்டறியவே முடியாது.

அவருடைய தூய குணயியல்புகளைக் கணக்கிடுவது மனிதனின் வேலை அன்று. பிரித்தறிய வேண்டிய முறையில் அவரின் உயர் பதவியினைப் பிரித்தறியப்படவில்லை என்பது வருந்தத்தக்கதே! உலகிலிருந்து மறைந்த அந்த (ஏகத்துவத்தை) மீண்டும் அதே உலகிற்கு கொண்டு வந்தவர் அந்த வீரர் ஒருவரே! அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பைக் கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற இரக்கத்தில் அவர் உயிரே உருகி விட்டது. எனவே அவரின் உள்ளத்தின் இரகசியத்தை உணர்ந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும், முன்னவர் – பின்னவர் அனைவரையும் விடவும் சிறப்பினை வழங்கினான். மேலும் அவரின் குறிக்கோள்களை வாழ்நாளிலேயே நிறைவேற்றினான். அவர்கள் தான் எல்லா அருள்களின் ஊற்றாக இருக்கின்றார்கள். எவரொருவர் அன்னாரது அருளின் மூலமாக அன்றி, சுயமாக உயர்ந்த அந்தஸ்து தனக்கு கிடைத்திருப்பதாக வாதிக்கிறாரோ அவர் மனிதனல்ல. ஷய்த்தானின் சந்ததியாக இருக்கின்றான். ஏனென்றால் எல்லா அருள்களின் திறவுகோல் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து ஞானங்களின் கருவூலங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களின் மூலமாக எவரொருவர் இதனை அடைய மாட்டார்களோ அவர்கள் எப்போதும் இழந்தவராகவே இருப்பார். நாம் சாதாரணமானவர்கள். மேலும் நமது நிலைதான் என்ன? உண்மையான தவ்ஹீதை நாம் இந்த நபி

(ஸல்) அவர்கள் மூலம்தான் பெற்றோம் என்பதை ஏற்க மறுத்து விட்டால் நாம் அருள்களை நிராகரித்தவர்களாக ஆகி விடுவோம். மேலும் உயிருள்ள இறைவனின் அறிமுகமும் நமக்கு அந்த முழு மனிதர் மூலமாக அவர்களின் ஒளியிலிருந்து கிடைத்துள்ளது. மேலும் நாம் இறைவனின் முகத்தினை காணக்கூடிய அவனது வார்த்தைகள் மற்றும் அவனை சந்திக்கும் வாய்ப்பும் இந்த கண்ணியமிக்க ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமாகத்தான் கிடைத்தது. இந்த சூரியனின் நேர்வழியின் கதிரானது நம்மீது வெயிலைப் போன்று விழுகின்றது. மேலும் நாம் அவர்களின் முன்பு நின்றால்தான் நம் ஒளி பெற்றவராக இருக்க முடியும்.

**மேலும் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

நாம் நேர்மையுடன் நோக்கும் போது நுபுவ்வத் (நபித்துவத்தின்) தொடர்ச்சியில் மிக உயர் தகுதியுடைய, கண்ணியமிக்க நபியாகவும், உயிருள்ள நபியாகவும், இறைவனின் பேரன்புக்குரிய நபியாகவும் ஒருவரையே காண்கிறோம். அவர் நபிமார்களின் தலைவரும், தீர்க்கதரிசிகளில் மிகப்பெருமைக்குரியவரும், (தூதராக) அனுப்பப்பட்ட அனைவரின் கிரீடமும் ஆகிய ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பத்து நாட்கள் பின்பற்றிச் செல்வதினால் கிடைக்கின்ற அந்த ஒளி, (அவர்களைப் பின்பற்றாமல்) ஆயிரம் வருடங்கள் வரை கூட (அத்தகைய ஒளி) கிடைக்காது.

**மேலும் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

எனது கொள்கை என்னவென்றால், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை ஒரு பக்கம் தனியாக வைத்து விட்டு, மறுபக்கம் இதுவரை வந்து சென்ற நபிமார்கள் அனைவரும் ஒன்றுகூடி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் செய்த அந்த செயலை – சீர்திருத்தத்தை செய்வதென்றால் நிச்சயமாக முடியாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு கிடைத்த அந்த நறுமனம் மற்றும் ஆற்றல் மற்றவர்களுக்கு கிடைக்கவில்லை.

இதனை கூறுவதால் நான் நபிமார்களை மதிப்பதில்லை என அறிவற்ற ஒருவர் கூறலாம். ஆனால் நான் எனது நபிமார்களை கண்ணியப்படுத்துவது மற்றும் மதிப்பதை எனது ஈமானின் ஒரு பகுதியாகக் கருதுகிறேன். ஆனால் எல்லா நபிமார்களைக் காட்டிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருள்களை மதிப்பது எனது ஈமானின் உன்னதமான ஒரு பகுதியாக இருக்கின்றது. இது எனது நரம்புகளில் கலந்து விட்டது. இதனை அகற்றி விடுவது என் கையில் இல்லை. பாக்கியமிழந்தவர்கள் என்ன கூறினாலும் சரி அவர்கள் கூறிக்கொண்டே இருக்கட்டும். ஏனைய நபிமார்கள் தனிப்பட்டோ அல்லது ஒன்றுசேர்ந்தோ செய்ய முடியாத செயலினை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் செய்திருக்கின்றார்கள். மேலும் இது இறை அருளாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இப்போது மக்களுக்காக இப்பூமியில் திருக்குர்ஆனைத் தவிர வேற ஒரு வேதம் இல்லை. ஆதமின் மக்களுக்கு முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர இப்போது வேறு எந்த தூதரும் பரிந்துரையாளரும் இல்லை. எனவே ஆற்றலும், கம்பீரமுமிக்க அந்தத் தூதரிடம் உண்மையான அன்பு கொள்ள முயற்சி செய்யுங்கள். பிறருக்கு அவரை விட எவ்வகை பெருமையையும் கொடுக்காதீர்கள். இதனால் நீங்கள் வானில் மீட்புக்குரியவர்களாக எழுப்பப்படுவீர்கள். மேலும் நினைவில் கொள்ளுங்கள். இரட்சிப்பு என்பது மரணத்திற்கு பின்னர் நிகழ்வதன்று. மாறாக இவ்வுலகில் தன் ஒளியைக் காட்டுவதே உண்மையான இரட்சிப்பு ஆகும்.

இரட்சிப்பு கிடைக்கப் பெற்றவர் யார்? இறைவன் இருக்கின்றான் என்பது உண்மை என்றும், அவனுக்கும் படைப்பினங்களுக்கும் இடையே பரிந்துரை செய்பவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஒருவரே என்றும், வானத்தின் கீழ் அம்மாநபியை விட மேலான தகுதியினைப் பெற்றவர் வேறு எவரும் இல்லையென்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர என்றென்றும் கொள்கையிலும் கோட்பாட்டிலும் வேறெவரும் உயிர் வாழ்வதை இறைவன் விரும்பவில்லை என்றும் உறுதியாக நம்புவதே இரட்சிப்பு பெற்றவர் ஆவர்.

ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் நிலையான வாழ்க்கையினை அறிமுகப்படுத்தியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இது ஒரு வியக்கத்தக்க விஷயமாகும். உலகம் அழியும் தருணத்தில் இருக்கின்றது. ஆனால் இந்த முழுமையான நபியின் அருள்களின் கதிர் இன்னும் அழியவில்லை. இறைவேதம் இதற்கு தடையாக இல்லாமல் இருந்தால் இந்த நபியைக் குறிப்பிட்டு அவர் இன்னும் பூத உடலுடன் வானத்தில் இருக்கிறார் என்று கூறியிருக்க முடியும். ஏனென்றால் நாம் அவரது தெளிவான (செயல்களின்) விளைவினைப் பார்க்கிறோம். அவரது மார்க்கம் உயிருள்ளதாகும். அவரை பின்பற்றக்கூடியவர் உயிர் பெற்று விடுகின்றார். மேலும் அவரின் மூலமாக ஒருவருக்கு உயிருள்ள இறைவன் கிடைத்து விடுகின்றான். இறைவன் அவரையும் அவரின் மார்க்கத்தையும் அவரை நேசிப்பவரையும் நேசிக்கின்றான் என்பதை நாம் கண்டு விட்டோம். உண்மையில் அவர் உயிருள்ளவர். வானத்தில் அவரது தகுதியானது மிகவும் உயர்ந்தது. ஆனால் மரணத்தை அடைகின்ற மற்றொரு பிரகாசமான உடலுடன் தமது ஆற்றல்மிக்க இறைவனிடம் இருக்கின்றார்.

ஒருவர் நடுநிலையுடன் பார்த்தாரென்றால், எவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தகுதியினை அறிந்திருந்தார்களோ அவ்வாறு வேறு எவராலும் அறிய முடியாது என்று அவரால் கூறாமல் இருக்க முடியாது.

எதிரிகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக குரல் எழுப்பிய போது அதனை தடுத்து, அதற்கெதிராக தனது குரலை உயர்த்தியதன் மூலம் ஜிஹாது செய்தவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மட்டுமே ஆவார்கள் என்பதை நடுநிலையோடு சிந்திக்கும் ஒருவரால் கண்டுகொள்ள முடியும். 1897 ஆம் ஆண்டு பாதிரிகளின் தரப்பிலிருந்து குஜ்ரன்வாலாவிலுள்ள மிஷன் பிரஸ் சார்பாக இஸ்லாத்திற்கு எதிராக ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது. அதில் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களைப் பற்றி மிகவும் கீழ்த்தரமான முறையில் எழுதப்பட்டிருந்தது. மேலும் முஸ்லிம்களை திசை திருப்ப முயற்சி செய்யப்பட்டது. முஸ்லிம்களின் உள்ளங்களை புண்படுத்துவதற்காக 1000 பதிப்புகள் ஆலிம்களுக்கும் முஸ்லிம்களின் தலைவர்களுக்கும் இலவசமாக கொடுக்கப்பட்டது. அதில் ஒரு பிரதி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் அனுப்பப்பட்டது. இதற்குப் பதிலாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார்கள். அதில் உங்களுக்கும் இதற்குப் பதிலாக இவ்வாறான கீழ்த்தரமான வார்த்தைகளைக் கொண்ட புத்தகங்களை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்று கூறிய, ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்களுக்கு கவனமூட்டியவாறு கூறினார்கள். முஸ்லிம்கள் எல்லா நபிமார்களின் மீது ஈமான் கொண்டுள்ளார்கள். ஆகவே, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் பற்றியோ அல்லது வேறு எந்த நபியினைப் பற்றியோ இவ்வாறான கீழ்த்தரமான வார்த்தைகளை முஸ்லிம்களால் எழுத முடியாது. தேவையற்ற செயலைச் செய்யவும் முடியாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள். ஒவ்வொரு மதமும் தத்தமது மதத்தின் சிறப்பினை கூறட்டும். மற்ற மதத்தின் மீது தீய வார்த்தைகளை அள்ளிக் கொட்டுவது வேண்டாம் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். இந்த ஒரு வழிமுறைப்படிதான் சாந்தியும், சகோதரத்துவமும் நிலைபெற முடியும். இதைத் தவிர வேறு நல்ல வழிமுறை கிடைப்பது சாத்தியமல்ல.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களைப் பற்றி தவறாகப் பேசும் எதிரிகளின் மீது ஓர் ஆவேசம் இருந்தது. இதற்காக அவர்கள் ஒவ்வொரு நொடிப்பொழுதும் இதனை தடுப்பதற்காக செயல்பட்டு வந்தார்கள். நாம் எவ்வாறு இதற்கு எதிர்ப்பினை தெரிவிக்க வேண்டும்? எந்த வழிமுறையினை முஸ்லிம்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்? நீ எந்த பிரிவினைச் சார்ந்தவன் என்று கூட பார்க்காமல் அனைத்து முஸ்லிம்களுக்கும் புரிய வைத்தார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தகுதியினை பாதுகாத்தல் என்பது எவ்வாறான விஷயமென்றால் இதற்காக அனைத்து முஸ்லிம்களும் ஒன்றுபட்டு விட வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நமது எதிரிகள் ஆயிரக்கணக்கான ஆட்சேபனைகளை வைத்து இஸ்லாத்தின் அழகான முகத்தை சீரழிக்க விரும்புகின்றனர். அதனை பயங்கரமான ஒன்றாகக் காட்டுவதற்கு விரும்புகின்றனர். எனவே நமது செயல்களும் இஸ்லாத்தின் உன்னதமான அழகினை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். இஸ்லாத்தின் போதனைகளை முழுமையாக நாம் அறிந்து கொள்ள வேண்டும். உண்மையுடனும் பொய்யான தவறான அந்த ஆட்சேபனைகளின் உண்மையை அவர்களுக்கு கூற வேண்டும். அதில்தான் எல்லா மக்களுக்கும் நன்மை இருக்கின்றது. மேலும் அவர்களுக்கு இஸ்லாமிய முகமானது எந்த அளவுக்கு பிரகாசமானது, அருளுக்குரியது மற்றும் எல்லா அசுத்தங்களிலிருந்தும் தூய்மையானது என்பதைக் காட்ட வேண்டும். இதுதான் நாம் செய்யக்கூடிய முக்கியமான செயல் ஆகும். பொய்யைக் கொண்டு சமுதாயங்களுக்கு இடையில் இஸ்லாத்தைப் பற்றி தீய எண்ணங்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதனை வேரோடு அகற்றி விட வேண்டும். இவ்வேலையானது அனைத்து வேலைகளை விடவும் முதன்மை வாய்ந்ததாக இருக்கின்றது. இதில் நாம் சோம்பேறித்தனத்தைக் காட்டினோம் என்றால் இறைவனிடத்தில் நாம் பாவியாவோம். இஸ்லாத்தைப் பற்றிய உண்மையான அனுதாபமும், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் மீது உண்மையான நேசமும் தான். இவ்வாறான இட்டுக்கட்டுகளிலிருந்து ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மற்றும் இஸ்லாத்தினை தூய்மைப்படுத்திக் காட்ட வேண்டும். மேலும் தீய உள்ளம் கொண்டவர்கள் தவறான எதிர்விளைவை நம்மிடம் தூண்ட முயன்றால், அதற்கு நாம் இடம் தரக் கூடாது. எவர் இஸ்லாத்திற்கு எதிராக தாக்குதல் நடத்துவாரோ அவரை நாம் அதிலிருந்து தடுக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தத்தமது எண்ணத்திற்கேற்ப செயல்படுகின்றனர். ஆனால் இறைவன் நமது உள்ளத்தினை இந்தவொரு விஷயத்திற்காக திறந்திருக்கின்றான். அதாவது இன்றைய காலத்தில் இஸ்லாத்திற்கு எதிராக செய்யும் உண்மையான சேவை எதில் இருக்கின்றதென்றால், இஸ்லாத்தின் மகத்துவத்தைக் குறைப்பதற்காக விதைக்கப்பட்ட அந்த தீய விதைகளையும் மற்றும் ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் பரப்பப்பட்ட ஆட்சேபனைகளையும் வேரோடு பிடுங்கி, இஸ்லாத்தின் ஒளி மற்றும் பரக்கத்துகளை மற்ற சமுதாயங்களுக்குக் காட்ட வேண்டும். அவர்களது உள்ளம் அந்த பொய்யுரைப்பவர்களிடமிருந்து விலகி விட வேண்டும். இவ்வாறான மக்கள் தான் பொய்யினால் கலக்கப்பட்ட விஷயங்களை வெளியிட்டுள்ளார்கள். சிலரது இந்த சிந்தனையால் நமக்கு மிகவும் வருத்தமாக இருக்கின்றது. அவர்கள் இஸ்லாத்திற்கு எதிரான பலதரப்பட்ட பொய்கள் வெளியிடப்பட்டிருப்பதை அறிகின்றனர். மக்கள் ஏமாற்றத்திற்கு ஆளாகியிருப்பதை அறிகின்றனர். இவ்வாறிருந்தும், இவர்கள் இவ்வாறான ஆட்சேபனைகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பது எவ்விதத்திலும் அவசியமில்லை. மாறாக, வழக்கினைத் தொடர்ந்து, அரசாங்கத்திற்கு ஒரு நினைவூட்டல் அனுப்புவதே போதுமானது என்று கூறினார்கள். எவரேனும் ஒருவரைப் பிடித்து வழக்கினை தொடர்வதோ போதுமானதல்ல. மாறாக, செயலில் நாம் ஈடுபட வேண்டும். தொடர்ந்து நிலையான செயலைச் செய்து வருவது அவசியமாகும்.

ஆக இதுதான் ஓர் உண்மையான வேதனையாகும். விழிப்பாய் இருந்து தொடர்ந்து முயற்சி செய்தவாறு குற்றச்சாட்டுகளுக்கு எதிராக எதிர்ப்பினை வழங்கிக் கொண்டே செல்லுங்கள். மேலும் தமது செயல்களை ஓர் உண்மையான முஸ்லிமின் செயலாக மாற்றி அமையுங்கள். இது அல்லாமல் நினைவூட்டல் அனுப்பியோ அல்லது ஊர்வலம் திரட்டியோ அல்லது ஒரு சில முழக்கங்களை முழங்கி விட்டு அமர்ந்து விடுவதிலிருந்து தவிர்ந்திருங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்காக எவ்வாறு கொண்டிருந்தார்கள் என்பது நான் வைக்கும் இந்த மேற்கோள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எந்தவோர் மனிதரும் இறைவனுக்கு அஞ்சாமல் நமது கண்ணியமிக்க முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீது முறையில்லாமல் தீய வார்த்தைகளைக் கூறுவதிலிருந்தும், இட்டுக்கட்டி தீய வார்த்தைகளை

கூறுவதிலிருந்தும் விலகவில்லை என்றால் அவர்களிடம் நாம் எவ்வாறு சமாதானத்தை மேற்கொள்ள முடியும். நான் உண்மையிலேயே கூறுகின்றேன். நிலத்திலுள்ள பாம்புகள் மற்றும் காடுகளில் வாழும் ஓநாய்களிடம் சமாதானத்தை மேற்கொள்ள முடியுமே தவிர அந்த மக்களிடம் நம்மால் சமாதானத்தை மேற்கொள்ள முடியாது. அவர்கள் நமது உயிர் மற்றும் தாய், தந்தையர்களை விட மேலான அன்பான ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இழிவான வார்த்தைகளைக் கொண்டு அழைக்கின்றனர். இறைவன் நமக்கு இஸ்லாத்தில் மரணத்தினை தரட்டுமாக. நாம் ஈமானை வீணாக்கக் கூடிய செயலினை செய்வதில்லை.

பிறகு எதிரிகளின் குற்றச்சாட்டினைப் பற்றி கூறியவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் கண்ணியத்தை குறித்த இவர்களின் கேலி கிண்டல்களை விட வேறு எந்த விஷயமும் எனது உள்ளத்தினை இந்த அளவுக்கு துயரப்படுத்தியதில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீது இட்டுக்கட்டி கூறக்கூடிய அவர்களது பேச்சானது எனது உள்ளத்தினை காயப்படுத்தியுள்ளது. இறைவன் மீது ஆணையாக! எனது அனைத்து குழந்தைகளும், குழந்தைகளின் குழந்தைகளும், மேலும் எனது அனைத்து நண்பர்களும், தொண்டர்களும், பணியாளர்களும் எனது கண் முன்னே வெட்டப்பட்டாலும், எனது கை கால்கள் வெட்டப்பட்டாலும், எனது கண்கள் பிடுங்கி எறியப்பட்டாலும், எனது எல்லா குறிக்கோளினையும் அடைய விடாமல் தடுத்தாலும் சரியே! எனது அனைத்து இன்பங்களையும் நான் தொலைத்து விட்டாலும் சரியே! இவ்வளவுக்கும் மேலாக, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது இவ்வாறான அசுத்தமான வார்த்தைகளைக் கொண்டு எதிர்ப்பது எனக்கு மிகப்பெரிய வேதனைக்குரியதாகும். எனவே எனது வானத்தின் எஜமானனே! நீ எங்கள் மீது உனது உதவியினையும் அருளையும் பொழியச் செய்வாயாக! மேலும் இந்த சோதனையிலிருந்து எங்களுக்கு மீட்பினை வழங்குவாயாக!

இன்னும் ஒரு சில இஸ்லாத்தின் எதிரிகளான பாதிரிகள் இஸ்லாத்தின் மீது தீய வார்த்தைகளை அள்ளி வீசுவதிலிருந்து விலகியிருக்கவில்லை. கடந்த சில நாட்களுக்கு முன் அமெரிக்காவில் எந்த பாதிரி திருக்குர்ஆனை எரிக்க அறிவிப்பு கொடுத்தாரோ அவர் இன்னும் அதே எண்ணத்திலேயே உள்ளார். அவர் இந்த எண்ணத்தை மாற்றவில்லை. இங்கிலாந்தில் அவரது வருகைக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சமீபத்தில் அதற்கான அறிவிப்பும் செய்யப்பட்டது. ஒரு தரப்பினர் அவரை அழைத்தனர். பார்லிமெண்டிற்காகக் கூட இருக்கலாம். இது ஒருபக்கம் இருக்கட்டும். நேற்றைய தினத்தின் ஒரு செய்தி பிரிட்டீஷ் அரசாங்கம் இவரது வருகைக்கு தடை விதித்து, எமது நாட்டில் பலதரப்பட்ட மதத்தைச் சார்ந்த மக்கள் வசிக்கின்றனர். நாம் குழப்பத்தை விரும்பவில்லை. இதனை நாங்கள் சகித்துக் கொள்ள மாட்டோம். உங்களுக்கு இங்கு வருவதற்கான அனுமதி இல்லை என்று கூறியது. பிரிட்டீஷ் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது வரவேற்கத்தக்கது. இறைவன் இனி வரும் காலங்களிலும் நீதியுடன் செயல்படுவதற்கான நல்வாய்ப்பு இதற்கு (இந்த நாட்டிற்கு) தந்தருள்வானாக! ஆமீன். மேலும் மற்ற நாடுகளின் அரசாங்கமும் இதனிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். இதனால் உலகத்திலுள்ள குழப்பங்கள் அனைத்தும் முடிந்து விடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நடைமுறை மூலமாக பல்வேறு சமயத்தில் எவ்வாறு தமது ரோஷத்தை வெளிப்படுத்தினார்கள் என்பதன் பக்கம் வருகின்றேன். ஒரு சில சம்பவங்களை கூறுகின்றேன். லேக்ராமின் சம்பவம் நாம் அறிந்த ஒன்றாகும்.

ஒருமுறை இரயில்வே ஸ்டேஷனில் அன்னார் ஒளூ செய்து கொண்டிருந்தார்கள். லேக்ராம் அங்கு வந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஸலாம் கூறினான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எவ்வித பதிலும் கூறாமல் ஒளூ செய்தார்கள். அவர் எனது ஸலாமினை கேட்கவில்லையோ என்று நினைத்து மறுபக்கமாக வந்து ஸலாம் கூறினான். அதன் பிறகும் அன்னார் (அலை) அவர்கள் பதில் கூறவில்லை. அவன் சென்று விட்ட பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒளூ செய்தவுடன், ஒருவர் வந்து லேக்ராம் தங்களுக்கு ஸலாம் கூறினான் என்று கூறவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், அவன் எனது எஜமானர் (ஸல்) அவர்களை தீய வார்த்தைகளைக் கொண்டு அழைத்து விட்டு எமக்கு ஸலாம் கூறுகின்றாரா? என்று கேட்டார்கள்.

இந்த தன்மான உணர்வைத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு காட்டித் தந்துள்ளார்கள். ஒவ்வொரு முஸ்லிமும் இவ்வாறே செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் ஷேக் யாகூப் அலி சாஹிப் இர்ஃபானி ஒரு சம்பவத்தை எழுதுகின்றார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்:

டாக்டர் பாதிரி வொயிட் பிரெக்ட் அவர்களை 1925 -ல் இலண்டனில் சந்தித்தேன். அந்த சமயத்தில் டாக்டர் ஸ்டன்ட் ஸன் என்ற பெயரில் அழைக்கப்பட்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடனும் பல சந்திப்பு அவருடன் நிகழ்ந்திருக்கிறது. பாதிரி கூறுகிறார். அதிலும் அவர் கலந்து கொண்டார். இவ்வாறான வரலாற்று சம்பவத்துடன் இவர்களின் ஒரு சம்பவமும் இருந்தது. அந்த வகையில் அந்த ஆங்கிலேயே பாதிரியினை சந்திக்க விருப்பப்பட்டேன். பின்பு நான் இலண்டனில் சென்று சந்தித்தேன். பேச்சுக்கு இடையில் கேள்விகளுக்கு பதில் அளித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு சில சம்பவங்கள் பேசப்பட்டன. ஒரு தருணத்தில் அந்த பாதிரி, நான் மிர்ஸா சாஹிபிடம் ஒரு விஷயத்தைக் கண்டேன். அது எனக்கு விருப்பமானதாக இருந்ததில்லை. அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனை செய்யப்படும் போது கோபமடைந்தார்கள். அவர்களின் முகம் மாறியது. எவ்வாறான ஆட்சேபனை என்றால் அதனை வார்த்தைகளால் கூற முடியாது. மற்றபடி பொதுவாக பலதரப்பட்ட ஆட்சேபனைகள் கிளம்பத்தான் செய்யும். அதே சமயம் இவ்விஷயத்தில் தகாத அளவில் பேசும் போது அன்னார் கோபம் அடைந்தார்கள். மேலும் முகம் மாறியது.

இர்ஃபானி சாஹிப் கூறுகின்றார்கள்: நான் பாதிரியிடம் கூறினேன். எந்த விஷயம் தங்களுக்கு விருப்பமானதாக இருந்ததோ அதன் மீது நான் என்னை தியாகம் செய்கிறேன். ஏனென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்வின் ஒரு பகுதி எவ்வாறு பிரகாசம் அடைகிறதென்றால், அன்னாரின் ரோஷம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதான நேசம் அதன் மூலம் வெளிப்படுகின்றது. தங்களது பார்வையில் இது ஒரு குறையாக தெரிந்தாலும் நான் இதனை ஓர் உன்னதமான செயலாகவே கருதுவேன். தங்களின் வாயின் மூலமாக இதனை கேட்டதில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மீதான எனது நேசம் இன்னும் அதிகமாகி விட்டது. ஆக, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மீதான ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அன்பு எல்லையற்றதாக இருந்தது. எவராவது ஒருவர் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை தகாத வார்த்தையினைக் கொண்டு கூறினால் அதனை அவர்கள் சகித்துக் கொள்ளமாட்டார்கள்.

ஆக, இதுதான் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது வைத்திருந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கண்ணியமாக இருந்தது. இதனை பிற மக்களும் எளிதாக அடையாளம் கண்டிருந்தார்கள். அதாவது மரியாதையின் எல்லைக்குள் இருந்தவாறு பேச வேண்டும் என்பது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் செயல் மூலம் வெளிப்பட்டது.

ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது செயல் மூலமாக தமது புத்தகம் மற்றும் சொற்பொழிவின் மூலமாக ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் உண்மையான நேசம் மற்றும் கண்ணியத்தினை உலகத்தின் முன்பு தெளிவுபடுத்தி விட்டார்கள். பிறகு தமது ஜமாஅத்திலும் இதே போதனையைத்தான் கூறியும் வந்தார்கள். நீங்கள் உங்கள் தன்மானத்தை வெளிப்படுத்துங்கள். ஆனால் சட்டத்திற்குட்பட்டவாறு வெளிப்படுத்த வேண்டும்.

இந்த வகையில் ஓர் ஆரியர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சம்பந்தமாக மனிதனை புண்படுத்தக்கூடிய ஒரு நூலினை எழுதினார். பிறகு வர்தமான் என்ற பத்திரிகையிலும் இக்கட்டுரை பின்பு வெளியிடப்பட்டது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அதனை மறுப்பதற்கு பலதரப்பட்ட விதத்தில் முயற்சி செய்தார்கள். ஆனால் அத்துடன் இந்த அறிவுரையினை வழங்கினார்கள். அதாவது முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்தை பாதுகாப்பதற்காக தன்மானத்தை வெளிப்படுத்துங்கள். ஆனால் அத்துடன் ஒவ்வொரு முஸ்லிமும் தத்தமது நஃப்ஸினை தன்வசம் வைத்துள்ளார்கள் என்பதையும் அதனால்

தோல்வி அடைந்தவராகமாட்டார்கள் என்பதையும் வெளிப்படுத்த வேண்டும். முஸ்லிம்கள் இதனை வெளிப்படுத்தினால் உலகம் அவர்களை எதிர்ப்பதை விட்டு தானே விரண்டோடி விடும்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஒரு போஸ்டர் ஒன்றினை வெளியிட்டார்கள். அதன் வார்த்தைகளை நாம் கண்டோம் என்றால், அவர்கள் எவ்வாறு தனது தன்மானத்தின் காட்சியினை வெளிப்படுத்தியுள்ளார்கள் என்பது தெரிய வரும். பின்பு முஸ்லிம்களையும் தன்மானம் காட்டுவதற்காக முன்வரச் செய்ய வைத்தார்கள்.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனை கூறும் போது கூறிய மேற்கோள் இஸ்லாத்திற்கு இதை விட துயரத்திற்கான வேறு ஏதாவதோர் காலம் வர முடியுமா? இந்த அமைதியின்மையை போன்ற வேறு நிலை ஏற்பட முடியுமா? நம்முடன் இருப்போருக்கு இது தெரியாதா? நாம் எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அனைத்து உயிர் மற்றும் உள்ளத்தைக் கொண்டு நேசிக்கின்றோம். எங்களது உடலின் ஒவ்வொரு அங்கமும் அவர்களின் காலடியின் கீழ் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இதனை அறிந்திருக்கின்றார்கள் என்றால் பிறகு இவ்வாறான நூல்கள் நமது மனதினை புண்படுத்துவதற்காக அன்றி வேறு எதற்காகத்தான் இருக்க முடியும்? நமது நெஞ்சத்தை கிழிக்க வேண்டும். நம்மை பயங்கரமான முறையில் அவமதித்து நாம் முஸ்லிம்களை இவ்வாறு செய்தோம் என்பதைக் காட்டுவதற்காக அன்றி வேறு எதற்காகத்தான் இருக்க முடியும்? இவர்களுக்கு இவ்விஷயத்தில் ஒருவருக்கு தனது கிழிந்து போன காலணியின் மீது எவ்வளவு அக்கறை இருக்குமோ அந்த அளவுக்கு கூட முஸ்லிம்கள் மீது இவர்களுக்கு அக்கறை இருக்காதா? முஸ்லிம்களை புண்படுத்துவதற்கு இவர்களுக்கு வேறு வழி கிடைக்கவில்லையா? எங்களது உயிர் இதோ இருக்கின்றது. எங்களது குழந்தைகள் உயிர் இதோ இருக்கின்றது. எவ்வாறு வேண்டுமானாலும் எங்களை துன்புறுத்துங்கள். ஆனால் இறைவன் மற்றும் நபிமார்களின் தலைவர் (ஸல்) அவர்களை இழிவுபடுத்தி தமது உலகம் மற்றும் மறுமையினை நாசப்படுத்தாதீர்கள். இவ்விஷயத்தில் எதிர்ப்பு தெரிவிப்பவர்களிடம் நாமும் சமாதானத்தை மேற்கொள்ள முடியாது. எங்களது தரப்பிலிருந்து மீண்டும் மீண்டும் கூறப்பட்டது. மீண்டும் ஒருமுறை இவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். அதாவது காட்டின் விலங்குகள், பொந்துகளில் வாழும் பாம்புகளுடன் நமது சமாதானத்தை மேற்கொள்ள முடியுமே தவிர இவர்களுடன் எப்போதும் சமாதானத்தை மேற்கொள்ள முடியாது. இவர்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை ஏசுபவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் சட்டத்தின் அடைக்கலத்தில் இருந்தவாறு என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். பஞ்சாப் மாநிலத்தின் உயர்நீதிமன்றத்தில் அந்த சமயத்தில் முஸ்லிம்களுக்கு எதிராகவே தீர்ப்பு வழங்கப்பட்டது. அதனை முற்றிலும் பயன்படுத்தியவாறு நீங்கள் எவ்வாறு வேண்டுமானாலும் எங்கள் நபி (ஸல்) அவர்களை திட்டுங்கள். ஆனால் இந்த சட்டத்தினை விட மேலான மற்றுமொரு சட்டமும் இருக்கின்றது என்பதை அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ளட்டும். அது இறைவனால் அமைக்கப்பட்ட இயல்பின் சட்டமாகும். அவர்கள் தங்களது ஆற்றல் அதிகாரத்தினால் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்து விடலாம். ஆனால் இயற்கைச் சட்டத்திலிருந்து தப்பிக்க முடியாது. மேலும் இந்த இயற்கை சட்டமானது முழுமையடையாமல் இருக்காது. எவருடன் எங்களுக்கு அன்பு இருக்கிறதோ அவரை ஏசிப் பேசிய பிறகு எந்தவொரு நபரும் எங்களிடமிருந்து சமாதானத்தை எதிர்பார்க்க முடியாது.

இந்த சம்பவம் நடந்த பிறகு இதன் விளைவாக இறை அருளால் இந்தியாவின் சட்டத்தில் மாற்றமும் ஏற்பட்டது. மக்கள் மீது நல்ல தாக்கமும் ஏற்பட்டது. அதன் பிறகு நபிமார்களையோ மார்க்கத்தின் தலைவர்களையோ ஏசிப் பேசுவதிலிருந்து விலகி இருந்தார்கள்.

பின்பு காலங்கள் செல்லச் செல்ல இதிலிருந்து 20, 25 வருடங்களுக்கு முன்பு சல்மான் ருஷ்டி என்பவன் தனது வெறுக்கத்தக்க ஒரு நூலை எழுதினான். அந்த நேரத்தில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இதற்கு பதில் அளித்தார்கள். குத்பாவிலும், பின்பு நூல் வடிவிலும் இதற்கு பதில் தரப்பட்டது. ஆங்கிலத்திலும் வெளி வந்தது. உருதுவிலும் மொழியாக்கம் வெளியிடப்பட்டது. அதன் தலைப்பு தீய ஆவியினால் பிடிக்கப்பட்டுள்ள சல்மான் ருஷ்டி என்பதாகும்.

2005 -ல் டென்மார்க்கில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் சம்பந்தமாக இழிவான ஓவியங்கள் வரைந்த போது டென்மார்க் மிஷனிலும், நானும் எனது குத்பாவின் மூலமாக இதற்கு பதிலளித்தேன். சட்டத்திற்குட்பட்டவாறு நடவடிக்கைகளை மேற்கொண்டோம். திருக்குர்ஆனும் இழிவுபடுத்தப்பட்டது. இஸ்லாமும் இழிவுபடுத்தப்பட்டது. இது ஹாலந்து நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர் தரப்பிலிருந்த இந்த எதிர்ப்பு நிகழ்ந்தது. அப்போதும் அதற்கான பதில் கொடுக்கப்பட்டது.

ஆக சட்டத்தின் வட்டத்திற்குள் இருந்தவாறு ஓர் உண்மையான முஸ்லிம் தமது தன்மானத்தை வெளிப்படுத்த வேண்டும். சட்டத்திற்கு வெளியில் நின்று நாம் எந்த செயலினை செய்தாலும் அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நேர்மை மற்றும் விசுவாசத்திற்கு எந்த தொடர்பும் இருக்காது. ஆனால் உண்மையில் இந்த நேசம் மற்றும் விசுவாசத்தை நிலைத்து நிற்கக்கூடியவை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியாக இருக்கின்றது. முஸ்லிம்கள் இந்த தூதுச் செய்தியினை உண்மைத்துவத்தை புரிந்தார்கள் என்றால், இந்த அழகிய போதனைகளை எட்ட வைப்பதில் பங்கு பெற்றவர்களாக ஆகி விட்டார்கள் என்றால் இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்காது. உண்மையில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின்படி நடந்தார்கள் என்றால் எதிரிகளின் வாய் தாமாகவே மூடியிருக்கும். தனது சுயநலத்திற்காக வாழும் முஸ்லிம்களில் ஒரு சிலர் சட்டத்தின் அடைக்கலத்தை தகாத முறையில் பயன்படுத்தியும் இருக்கின்றனர். அல்லது பலன் பெறுவதற்காக முயற்சி செய்தார்கள் என்றால் சட்டம் அவர்களை குற்றவாளி எனக்கருதி இந்த சுயநலத்தில் வேரினை துண்டித்திருக்கலாம். ஆனால் இவ்வனைத்து காயங்களும் தக்வாவை சார்ந்தவையாக இருக்கின்றன.

ஆக, முஸ்லிம்கள் தமது தன்மானத்தை வெளிப்படுத்த விரும்பினால் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் நம்மிடையே உருவாக்க விரும்பிய அந்த இறையச்சத்தை கைக்கொள்ளுங்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்காக வெளிப்படுத்தப்பட்ட தன்மானம் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் நிரம்பி காணப்படுகின்றன. ஒரு சில குத்பாவின் மூலம் அதனை கூறவும் முடியாது. நாம் இறைவன் மற்றும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் தகுதியினை அனைத்து ஆட்சேபனைகளிலிருந்தும் தூய்மையாக வைக்க வேண்டுமென்றால், அது எந்தவொரு சட்டத்தின் மூலமும் அல்ல. மாறாக உலகத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் கொண்டு வருவதால் மட்டுமே முடியும். இதுதான் உண்மை. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் உண்மையான போதனைகளின்படி நாம் செயல்பட்டால்தான் உலகத்திலுள்ள குழப்பங்கள் நீங்கும். மேலும் உலகத்தினை ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் கொண்டு வரவும் முடியும். ஆனால் ஒரு சட்டத்தினை உருவாக்கி அந்த சட்டத்தின் வழியாக சுயநலத்தை நாடினால் நாமும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்தக்கூடியவர்களாக ஆகி விடுவோம்.

நான் கூறியது போன்று வர்தமான் என்ற பத்திரிகை தொடர்பாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இது சம்பந்தமாக முஸ்லிம்களிடம் எதிர்ப்பை தெரிவிக்குமாறு கூறினார்கள். பிறகு அனைத்து முஸ்லிம் உம்மத்தும் முழுமையான அளவு எதிர்ப்பின் மொத்த உருவமாக ஆகி விட்டது. வழக்கும் தொடர்ந்தது. ஆனால் எவ்வாறிருந்த போதிலும், இறுதியில் மாற்றம் நிகழ நேர்ந்தது. குற்றவாளிகளுக்கு தண்டனையும் கிடைத்தது. அதன் தீர்ப்பு வெளிவந்த பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் சரியாக கூறினார்கள் என்றனர்.

எனது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் கண்ணியமானது ஜமாஅத்தில் ஒருவரது பலியை அதன் விலையாகக் கொடுத்தாலும் அதனை விட மேலானதாகும். ஏதேனும் ஒரு நபர் அல்லது ஜமாஅத் அதற்கு பதிலாக கொலையுண்டாலும் சரி அது நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்கு ஈடாகாது. எனது எஜமானர் (ஸல்) அவர்கள் உலகத்திற்கு வாழ்வு வழங்க வருகை தந்தார்களே தவிர, அவர்களின் உயிரினை எடுக்க வரவில்லை.

இன்றும் அனைத்து முஸ்லிம்களும் இதனை புரிந்தார்கள் என்றால் அதாவது சட்டமானது வெளிப்படையான குழப்பத்தை தீர்த்து வைக்கின்றதே தவிர உள்ளத்தினை அல்ல. அது உண்மையில் ஒரு

ஃபித்னா (குழப்பம்) ஆக இருந்தாலும் அதனை ஆராய்ந்து உண்மையில் அது ஃபித்னா தானா என்பதை அறியவும் முடியாது. உலகத்தின் உள்ளத்தில் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் நேசம் பதிந்து விட்டது என்றால் அப்போது தான் முஸ்லிம்களுக்கு உண்மையான மகிழ்ச்சியாக இருக்க முடியும். இருக்கவும் வேண்டும். இன்று ஒவ்வொரு அஹ்மதிக்கும் இது கடமையாகத்தான் இருக்கின்றது. இதற்காக முழு மனதுடன் முயற்சி செய்ய வேண்டும். மற்ற முஸ்லிம்களும் நிர்பந்தத்திற்கு பதிலாக மன்னித்தல் மற்றும் அன்பின் முன்மாதிரியினை காட்டினார்கள் என்றால், மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காட்டித் தந்த அந்த முன்மாதிரியினை வெளிப்படுத்தினார்கள் என்றால் பின்பு இதுதான் உண்மையான இஸ்லாத்திற்கு ஆற்றக்கூடிய தொண்டாக அமையும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எதிரிகளை மக்கா வெற்றியின் போது இரண்டு எதிரிகளை கொலை செய்ய முடிவு செய்தார்கள். பிறகு மக்கா வெற்றியின் போது படையினையும் அதன் பொழிவினையும் எதிரிகள் பார்த்த போது அதிர்ந்து போனார்கள். பிறகு உம்மே ஹானி (ரலி) என்ற பெண்மணியின் வீட்டில் அடைக்கலத்திற்காக வந்த போது உம்மே ஹானி (ரலி) அவர்கள் அடைக்கலம் கொடுத்தார்கள். பின்பு ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் அவர்களிடம் வந்து, நான் இரண்டு நபருக்கு அடைக்கலம் வழங்கி இருக்கின்றேன். ஆனால் எனது சகோதரர் அலி (ரலி) அவர்கள் நான் அவர்களைக் கொன்று விடுவேன். அவர்கள் குற்றவாளிகளாவர் என்று கூறுகின்றார் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் உம்மே ஹானியே! நீ யாருக்கு அடைக்கலம் வழங்கியுள்ளீர்களோ அவர்களுக்கு நாமும் அடைக்கலம் வழங்கியுள்ளோம். அவர்களை எதுவும் கூறப்படமாட்டாது என்று கூறினார்கள்.

இந்த அடைக்கலத்திற்கு பிறகு இந்த எதிரிகளுக்கு ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் நம்மீது இவ்வாறு அன்பினையும் நேசத்தினையும் காட்டியிருக்க நாம் எவ்வாறு நமது முகத்தினை காட்ட முடியும் என்று வெட்கம் கொண்டார்கள். ஆனால் ஒரு சமயத்தில் ஹாரிஸ் பின் ஹிஷாம் (ரலி) அவர்கள் மஸ்ஜிதின் அருகில் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களிடம் யதார்த்தமாக சந்திக்க நேரிட்டது. ரஹ்மத்துல் லில்ஆலமீன் (ஸல்) அவர்கள், மிகவும் அன்பான முறையில் சந்தித்தார்கள். பின்பு ஹாரிஸ் (ரலி) அவர்கள் யர்மோக் என்ற போரில் இஸ்லாத்திற்காக போரிடும் போது நேர்மையைக் காட்டியவாறு ஷஹீத் ஆனார்கள். ஆக, ஒரு பெண்மணியின் அடைக்கலத்திற்கும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மதிப்பளித்தார்கள். மேலும் அவர் இதன் காரணமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

இன்றும் நமக்கு இந்த முன்மாதிரி தான் அவசியமாக இருக்கின்றது. பின்பு இஸ்லாத்தின் உண்மை தூதுச் செய்தியை உலகத்தின் முன் எட்ட வைப்பது அவசியமாகும். இவ்வாறில்லாமல் வெளிப்படையாக சட்டம் ஒன்றை இயற்றி அதனை தவறாக செயல்படுத்துவது தகாத காரியமாகும்.

அல்லாஹ் நமக்கும் அனைத்து முஸ்லிம்களுக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 21.01.2011**

Translated by : **Maulvi R. ABDULLAH**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**